**இராம கோபாலன்**

*நிறுவன அமைப்பாளர்*

**இந்து முன்னணி,** *தமிழ்நாடு*

59, அய்யா முதலி தெரு,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2.
தொலைபேசி : 044-28457676


25-11-2009

## மதத்தின் பெயரால் பசு இனப் படுகொலையை அனுமதிக்கக் கூடாது! இந்து முன்னணி நிறுவனத் தலைவர் இராம கோபாலன் பத்திரிகை அறிக்கை

தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்றக்கழகம், தவ்ஹீத் ஜமாத் முதலானவை முஸ்லீம்களை பக்ரீத்தை முன்னிட்டு மாடு, ஒட்டகம் போன்றவற்றை வெட்ட ஆங்காங்கே விளம்பரங்கள் செய்து வருவது கண்டிக்கத்தக்கது! ஏதாவது செய்து மதக்கலவரத்தைத் தூண்ட வேண்டும் என்ற நோக்கத்தில் இவர்கள் செயல்படுகிறார்கள் என்பது வெட்டவெளிச்சமாகத் தெரிகிறது.

பசுவை, மாடுகளைப் பலியிடுவது இந்துக்களுக்கு விரோதமானதும், இயற்கை விவசாயத்தைச் சீரழித்து நாட்டுக்குக் கேடுவிளைவிக்கும் சதிச் செயல். இதனை இயற்கை ஆர்வலர்கள், தேச பக்தர்கள் கண்டிக்க, தடுக்க முன் வரவேண்டும்.

பொது இடங்களிலோ, வீடுகளிலோ பெரிய மிருகங்களை வெட்டுவதைத் தடுப்பதற்குக் காவல்துறையின் சட்டமே போதுமானது! இதனைச் சட்டத்தின் துணைகொண்டு தடுத்திட காவல்துறை மற்றும் மாநகராட்சி சுகாதாரத்துறை அதிகாரிகள், சுற்றுச்சூழல் அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

உச்ச நீதிமன்றத்தின் கருத்தின் அடிப்படையில் ஆந்திரா, கர்நாடகா மாநிலங்களின் உயர்நீதிமன்றங்கள் பல ஆண்டுகளுக்கு முன்பே இதற்குத் தடைவிதித்துள்ளது குறிப்பிடத்தக்கது. இத்தடையை ஒவ்வொரு ஆண்டும் பக்ரீத்துக்கு ஒரு வாரம் முன்பே காவல்துறை ஆணையர்கள் பத்திரிகை, மீடியா மூலம் பசு இனப் படுகொலை செய்யக்கூடாது என்று எச்சரிக்கின்றனர், நடக்காமல் பார்த்துக் கொள்கின்றனர்.

முஸ்லீம் மதக் கோட்பாட்டில் மாடுகளையோ, பசுக்களையோ பலிகொடுக்கச் சொல்லப்படவில்லை. முஸ்லீம் நாடுகளிலும் கூட இவை செய்யப்படுவதில்லை. மாடுகளையும், பசுக்களையும் கொல்லத் தூண்டுபவர்கள், இந்துக்களைப் புண்படுத்தவே இந்தச் செயல்களை விளம்பரப்படுத்துகிறார்கள். இதனால் மதநல்லிணக்கத்தைக் கெடுத்து, மதக் கலவரத்தை ஏற்படுத்த சதி செய்கிறார்கள். இதனைத் தடுக்க காவல்துறை தயக்கம் காட்டினால் மக்களே தடுக்க நேரிடும் என்பதைச் சுட்டிக்காட்டுகிறோம்.

இதனைக் காவல்துறைத் தடுக்க மறுத்தாலோ, மெத்தனமாக செயல்பட்டாலோ, சட்டவிரோத செயலைத் தடுக்கத் தவறிய செயலுக்காக அந்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க நீதிமன்றம் செல்ல நேரிடும் என்று எச்சரிக்கிறோம். பத்திரிகையாளர்களும், பிராணி வதைத் தடுப்பு குழுக்களும், இயக்கங்களும் கண்காணித்து காவல்துறை உரிய நடவடிக்கை எடுக்க வலியுறுத்த வேண்டும். காவல்துறை மெத்தனப் போக்காக செயல்படுமானால் இக்கொடுஞ்செயலை எதிர்த்து மக்கள் போராடவும் தயங்கமாட்டார்கள் என்று இந்து முன்னணி எச்சரிக்கிறது!

என்றும் தேசியப் பணியில்

**இராம கோபாலன்**

நிறுவன அமைப்பாளர்

இந்த அறிக்கையைத் தங்கள் பத்திரிகையின் அனைத்து பதிப்புகளிலும் வெளியிட வேண்டுகிறோம்.